بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 5:4 முஹர்ரம், 1430, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A,Email : suvanam@gmail.com, www.suvanam.com

## ஆஷூரா நோன்பு

- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.

முஹர்ரம் மாதத்தின் 9, 10 ஆம் நாட்களில் நோன்பு நோற்பது சுன்னத்தாகும். நபி(ஸல்) அவர்கள் முஹர்ரம் மாதம் 10 ஆம் நாள் நோன்பு நோற்றார்கள். யூதர்களும் இந்த நாளில் நோன்பு நோற்றதால் அவர்களுக்கு மாறு செய்வதற்காக எதிர்வரும் வருடம் நான் உயிருடன் இருந்தால் 9 ஆம் நாளையும் சேர்த்து நோன்பு நோற்பேன் என்றார்கள். இதனால் முஹர்ரம் மாதத்தின் 9-10 ஆம் நாட்களில் நோன்பு நோற்பது சுன்னத்தாகும்.

### இந்த நோன்பு ஏற்படுத்தப் பட்டதற்குரிய காரணம்

நபி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு சென்ற நேரம் யூதர்கள் நோன்பு நோற்றிருப்பதைக் கண்டு இது என்ன நோன்பு என வினவினார்கள். அதற்கு அவர்கள் இன்று நல்ல நாள், இந்த நாளில் தான் பனூ இஸ்ராயீல்களை அவர்களின் பகைவ (ஃபிர்அவ்)னிடமிருந்து அல்லாஹ் பாதுகாத்தான், அந்த நாளில் மூஸா(அலை) அவர்கள் நோன்பு நோற்றார்கள் என்று கூறினார்கள், அதற்கு நபி(ஸல்) அவர்கள் உங்களைவிட மூஸா(அலை) அவர்களை (மதிப்பதற்கு) நான் தகுதியுடையவன் என்று கூறி அந்த (முஹர்ரம் பத்தாம் நாள்) நோன்பை நோற்றார்கள், அந்த நோன்பை நோற்பதற்கு

தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க ...

### உள்ளே!

இறை நினைவுகள் - 3

இஸ்லாமும் பாடல்களும் - 4

இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 7

அழைப்பு பணியின் அவசியம் - 9

அறிவுப் போட்டி - 12

## வாருங்கள், சுவர்க்கத்தை பார்வையிடுவோம்

- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.

மறுமையை நம்புவது ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகும், மறுமையை நம்புவதென்பது மரணத்திற்கு பின் மறுமை என்னும் வாழ்வு இருக்கின்றது என்பதாகும், மறுமையில் அல்லாஹ் நல்லடியார்களுக்கு சுவர்க்கத்தையும், இறை நிராகரிப்பாளர்களுக்கு நரகத்தையும் ஏற்பாடு செய்து வைத்திருக்கின்றான். சுவர்க்கம் என்றால் என்ன, அதில் கிடைக்கும் இன்பங்கள் என்ன என்பதை கூறி, அதன் பக்கம் மக்களை ஆர்வம் காட்ட வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அச்சுவர்க்கத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்பையும் அதற்குரிய அமல்கள் செய்யும் நல்வாய்ப்பினையும் தந்தருள்வானாக.! இப்போது வாருங்கள்,அந்த சுவர்க்கத்தை பார்வையிடுவோம்.

### சுவர்க்கத்தின் பெயர்கள்:

1. அல் ஜன்னத்
2. தாருஸ் ஸலாம்
3. தாருல் குல்த்
4. தாருல் முகாமத்
5. ஜன்னதுல் மஃவா
6. ஜன்னாத்து அத்ன்
7. தாருல் ஹயவான்
8. ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸ்
9. ஜன்னாத்துன்னயீம்
10. அல் மகாமுல் அமீன்
11. மக்அது ஸித்க்
12. கதமு ஸித்க்

### சுவர்க்க வாசலின் பெயர்கள்

1. பாபு முஹம்மது
2. பாபுத்தவ்பா
3. பாபுஸ்ஸலா
4. பாபுஸ்ஸவ்ம் (அர்ரைய்யான்)
5. பாபுஸ்ஸகாத்
6. பாபுஸ்ஸதகாத்
7. பாபுல் ஹஜ்ஜி வல்உம்ரா
8. பாபுல் ஜிஹாத்

### குர்ஆனில் சுவர்க்கம்

நிச்சயமாக பயபக்தியுடையவர்கள் சுவனபதிகளிலும், நீரூற்றுகளிலும் (சுகம் பெற்று) இருப்பார்கள். (அவர்களை நோக்கி) "சாந்தியுடனும், அச்சமற்றவர்களாகவும் நீங்கள் இதில் நுழையுங்கள்" (என்று கூறப்படும்). மேலும்,

அவர்களுடைய நெஞ்சங்களிலிருந்து குரோதத்தை நாம் நீக்கி விடுவோம்; (எல்லோரும்) சகோதரர்களாக ஒருவரையொருவர் முன்னோக்கி அரியாசனங்களில் (ஆனந்தமாக) அமர்ந்திருப்பார்கள். அவற்றில் அவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாது; அவற்றிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுபவர்களுமல்லர். "என்னுடைய அடியார்களே! இந்நாளில் உங்களுக்கு எவ்வித பயமுமில்லை; நீங்கள் துக்கப்படவும் மாட்டீர்கள்" (என்று முஃமின்களுக்கு அல்லாஹ்வின் அறிவிப்பு வரும்). இவர்கள் தாம் நம் வசனங்கள் மீது ஈமான் கொண்டு, (முற்றிலும் வழிப்பட்டு நடந்த) முஸ்லிம்களாக இருந்தனர். நீங்களும், உங்கள் மனைவியரும் மகிழ்வடைந்தவர்களாக சுவர்க்கத்தில் நுழையுங்கள் (என்று மறுமையில் அவர்களுக்குக் கூறப்படும்). பொன் தட்டுகளும், கிண்ணங்களும் அவர்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கும்; இன்னும் அங்கு அவர்கள் மனம் விரும்பியதும், கண்களுக்கு இன்பம் தருவதும் அதிலுள்ளன, இன்னும், "நீங்கள் இங்கு என்றென்றும் தங்கியிருப்பீர்கள்!" (என அவர்களிடம் சொல்லப்படும்.) "நீங்கள் செய்து கொண்டிருந்ததன் (நன்மையான) காரணமாக இந்த சுவர்க்கத்தை நீங்கள் அனந்தரங் கொண்டீர்கள். "உங்களுக்கு அதில் ஏராளமான கனிவகைகள் இருக்கின்றன, அவற்றிலிருந்து நீங்கள் உண்பீர்கள்" (எனக் கூறப்படும்). 15:45 - 73

அவர்களுக்கு அறியப்பட்டுள்ள உணவு அவர்களுக்கு இருக்கிறது. கனி வகைகள் (அளிக்கப்படும்), இன்னும் அவர்கள் கண்ணியப்படுத்தப்படுவார்கள். இன்பம் அளிக்கும் சுவர்க்கங்களில் ஒருவரையொருவர் முன்னோக்கியவாறு கட்டில்கள் மீது (அமர்ந்திருப்பார்கள்). தெளிவான பானம் நிறைந்த குவளைகள் அவர்களை சுற்றி கொண்டுவரும். (அது) மிக்க வெண்மையானது. அருந்துவோருக்கு மதுரமானது. அதில் கெடுதியும் இராது. அதனால் அவர்கள் புத்தி தடுமாறுபவர்களும் அல்லர். இன்னும், அவர்களிடத்தில் அடக்கமான பார்வையும், நெடிய கண்களும் கொண்ட (அமர கன்னியரும்) இருப்பார்கள். (தூய்மையில் அவர்கள் சிப்பிகளில்) மறைக்கப்பட்ட முத்துக்களைப் போல் இருப்பார்கள். (அப்பொழுது) அவர்களில் ஒரு சிலர் சிலரை முன்னோக்கியவாறு பேசிக் கொண்டிருப்பார்கள். 37:40-50

பயபக்தியுடையவர்கள் நிச்சயமாக (அவர்கள்) அச்சமற்ற இடத்தில் இருப்பார்கள். சுவனச் சோலைகளிலும், நீர் ஊற்றுகளிலும் (இருப்பார்கள்). ஸுன்துஸ், இஸ்தப்ரக் (ஆகிய அழகிய பட்டாடைகள், பீராம்பரங்கள்) அணிந்து ஒருவரை ஒருவர் முகம் நோக்கி இருப்பார்கள். இவ்வாறே (அங்கு நடைபெறும்); மேலும் அவர்களுக்கு ஹூருல் ஈன்களை நாம் மண முடித்து வைப்போம். அச்சமற்றவர்களாக, சகல விதக்கனிவகைகளையும், அங்கு கேட்டு(ப் பெற்றுக்) கொண்டுமிருப்பார்கள். முந்திய மரணத்தைத் தவிர, அங்கு மரணத்தை அவர்கள் அனுபவிக்கமாட்டார்கள்; மேலும் (இறைவன்) அவர்களை நரகத்தின் வேதனையை விட்டும் காப்பாற்றிவிட்டான். (இதுவே) உம்முடைய இறைவனின் அருள் கொடையும்; இதுவே மிகப் பெரிய வெற்றியுமாகும். 44:51 - 57

(பொன்னிழைகளால்) ஆக்கப் பெற்ற கட்டில்களின் மீது ஒருவரையொருவர் முன்னோக்கியவாகளாக அவற்றின் மீது சாய்ந்திருப்பார்கள். நிலையான இளமையுடைய இளைஞர்கள் (இவர்கள் பணிக்காகச்) சுற்றிக் கொண்டே இருப்பார்கள். தெளிந்த பானங்களால் நிரம்பிய கிண்ணங்களையும், கெண்டிகளையும், குவளைகளையும் கொண்டு (அவர்களிடம் சுற்றி வருவார்கள்). (அப்பானங்களைப் பருகும்) அவர்கள் அவற்றினால் தலை வலிக்குள்ளாக மாட்டார்கள்; மதிமயங்கவுமாட்டார்கள். இன்னும் அவர்கள் தெரிந்தெடுக்கும் கனி வகைகளையும் விரும்பும் பட்சிகளின் (பறவைகளின்) மாமிசத்தையும் (கொண்டு அவ்விளைஞர்கள் வருவார்கள்). (அங்கு இவர்களுக்கு) ஹூருல் ஈன் (என்னும் நெடிய கண்களுடைய) கன்னியர் இருப்பர். மறைக்கப்பட்ட முத்துக்களைப் போல் அவர்கள் (இருப்பார்கள்). (இவையாவும்) சுவர்க்க வாசிகள் (இம்மையில் செய்து கொண்டிருந்த) செயல்களுக்கு கூலியாகும். அங்கு இவர்கள் வீணானதையும், பாவமுண்டாக்குவதையும் (கொண்ட பேச்சுகளைச்) செவியுற மாட்டார்கள். 'ஸலாம், ஸலாம்' என்னும் சொல்லையே (செவியுறுவார்கள்). இன்னும் வலப்புறத்தார்கள்! - வலப்புறத்தார்கள் யார்? (என்பதை அறிவீர்களா?) (அவர்கள்) முள்ளில்லாத இலந்தை மரத்தின் கீழும்; (நுனி முதல் அடிவரை) குலை குலையாகப் பழங்களுடைய வாழை மரத்தின் கீழும் இன்னும், நீண்ட நிழலிலும், (சதா) ஒலித்தோடிக் கொண்டிருக்கும் நீரின் அருகிலும், ஏராளமான கனிவகைகளின் மத்தியிலும் - அவை அற்றுப் போகாதவை, (உண்ணத்) தடுக்கப்படாதவை மேலும், உன்னதமான விரிப்புகளில் (அமர்ந்திருப்பர்). நிச்சயமாக (ஹூருல் ஈன் என்னும் பெண்களைப்) புதிய படைப்பாக, நாம் உண்டாக்கி அப்பெண்களைக் கன்னிகளாகவும்; (தம் துணைவர் மீது) பாசமுடையோராகவும், சம வயதினராகவும், வலப்புறத்தோருக்காக (ஆக்கி வைத்துள்ளோம்). முன்னுள்ளோரில் ஒரு கூட்டமும், பின்னுள்ளோரில் ஒரு கூட்டமும் (வலப்புறத்தோராக இருப்பார்கள்). 56:15-40

நிச்சயமாக அப்ரார்கள் (நல்லவர்கள்) 'நயீம்' என்னும் சுவர்க்கத்தில் இருப்பார்கள். ஆசனங்களில் அமர்ந்து (சுவர்க்கக் காட்கிகளைப்) பார்ப்பார்கள். அவர்களுடைய முகங்களிலிருந்தே (அவர்களுக்குக் கிட்டிய) பாக்கியத்தின் செழுமையை நீர் அறிவீர். (பரிசுத்த) முத்திரையிடப்பட்ட தெளிவான (போதையோ, களங்கமோ அற்ற) மதுவிலிருந்து அவர்கள் புகட்டப்படுவார்கள். அதன் முத்திரையிடப்பட்ட தெளிவான (போதையோ, களங்கமோ அற்ற) மதுவிலிருந்து அவர்கள் புகட்டப்படுவார்கள். இன்னும், அதனுடைய கலவை தஸ்னீமில் நின்றுமுள்ளதாகும். அது (தஸ்னீம், ஓர் இனிய) நீர்ச்சுனையாகும். அதிலிருந்து (அல்லாஹ்விடம் நெருங்கியவர்கள்) முர்புகள் அருந்துவார்கள். 83:22-28

இன்னும் இது போன்ற பல வசனங்களும் இத்தொடரில் உள்ளது. சுருக்கத்திற்காக இத்துடன் முடிக்கிறேன்.

### மறுமையில் அல்லாஹ்வின் சந்திப்பு

நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன்

அமர்ந்திருந்தோம். அப்பொழுது அவர்கள் வானில் பதினான்காம் பக்கத்து நிலவை(பரிபூரண சந்திரனை) பார்த்தார்கள். அப்பொழுது கூறினார்கள். நீங்கள் இந்த நிலவைப் பார்ப்பதைப் போல(கியாமத் நாளில்)உங்கள் ரப்பைக் கண் கூடாகக் காண்பீர்கள். அவனைப் பார்ப்பதில் உங்களுக்கு எந்தக் குழப்பமும் இருக்காது.

(புகாரி, முஸ்லிம்)

சுவர்க்கவாசிகள் சுவர்க்கத்தில் நுழைந்ததும், அல்லாஹுதபாரக வதஆலா, அவர்களிடம் வேறு எதனையும் நீங்கள் நாடுகிறீர்களா? அதனை நான் உங்களுக்கு அதிகப் படுத்துகிறேன். என்று கூறுவான். அதற்கவர்கள், எங்கள் இரட்சகனே! நீ எங்களின் முகங்களை வெண்மையாக்கி விட்டாய். எங்களை சுவர்க்கத்தில் நுழையச் செய்து விட்டாய். நரகை விட்டும் எங்களைக் காப்பாற்றி விட்டாய். (நீ எங்களுக்கு எல்லா விதமான அருட்கொடைகளையும், இன்பங்களையும், அளித்து விட்டாய்! இனி எங்களுக்கு வேறு என்ன வேண்டும்) என்பார்கள்.

அப்பொழுது அல்லாஹ் தனக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள திரையை அகற்றி விடுவான். (அப்பொழுது அவர்கள் தங்கள் இரட்சகனைப் பார்க்கும் பாக்கியத்தை பெறுவார்கள்) தங்கள் இரட்சகனைப் பார்ப்பதை விட வேறு எந்தப் பொருளும் அவர்களுக்குப் பிரியமானதாகக் கொடுக்கப்படவில்லை. (அவர்களது இரட்சகனைப் பார்ப்பதே எல்லாவற்றையும் விட அவர்களுக்கு மிகப் பிரியமானதாக இருக்கும்)

முஸ்லிம்: ஸுஹைபு(ரலி)

இன்ஷா அல்லாஹ் தொடரும்

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 20 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

## பிழை பொறுப்பு

1. நபி(ஸல்) அவர்கள் பள்ளிக்குள் நுழைந்த போது ஒருவர் தொழுது கொண்டிருந்தார், அவர், அவருடைய அத்தஹிய்யாத்தில் (பின் வரும் துஆவை) ஓதிக் கொண்டிருந்தார்.

' اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ يَا اَللهُ بأنك الْوَاحِدُ الْأَحَدُ الصَّمَدُ الَّذِي لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ أَنْ تَغْفِرَ لِيْ ذُنُوبِي إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ ' (أبوداود)

**பொருள்:** யா அல்லாஹ்! நிச்சயமாக நீ ஏகன், தனித்தவன், தேவையற்றவன், யாரையும் பெறாதவன், எவராலும் பெறப்படாதவன், உனக்கு நிகராக எவரும் எதுவும் இல்லை என்ற (உன் திருநாமம் மற்றும் உண் பண்புகளைக்) கொண்டு நான் உன்னிடம் கேட்கின்றேன், நீ என் பாவத்தை மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக நீ, மிக பிழை பொறுப்பவனும் கருணை பொழிபவனுமாய் இருக்கின்றாய். (என்ற துஆவை ஓதிக் கொண்டிருந்தார்.) அதற்கு நபி(ஸல்) அவர்கள் நிச்சயமாக அவருடைய பாவம் மன்னிக்கப்பட்டுவிட்டது என மூன்று முறை கூறினார்கள். (அபூதாவூத்)

2. ஒரு மனிதர் (பின்வரும் துஆவை) ஓதக் கேட்ட நபி(ஸல்) அவர்கள், நிச்சயமாக நீ அல்லாஹ்விடம் அவனின் திருநாமத்தைக் கொண்டு கேட்டு விட்டாய், அது எப்படிப்பட்ட பெயர் என்றால், அதைக் கொண்டு கேட்கப்பட்டால், அவன் (கேட்டதை) கொடுத்து விடுவான், இன்னும் அதைக் கொண்டு பிரார்த்திக்கப்பட்டால் அவன் விடையளிப்பான் எனக் கூறினார்கள்.

' اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ أَنِّي أَشْهَدُ أَنَّكَ أَنْتَ اللهُ لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ الْأَحَدُ الصَّمَدُ الَّذِيْ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ ' (أبوداود)

**பொருள்:** யா அல்லாஹ்! நிச்சயமாக நீதான் அல்லாஹ்! உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என நிச்சயமாக நான் சாட்சி கூறுகிறேன், நீ தனித்தவன், தேவையற்றவன், யாரையும் பெறாதவன், எவராலும் பெறப்படாதவன், அவனுக்கு நிகராக எவரும் எதுவும் இல்லை என்ற (உனது பெயர் மற்றும் பண்புகளைக் கொண்டு) நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன், (அபூதாவூத்)

3. அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நான் நபி(ஸல்) அவர்களுடன் ஒரு சபையில் இருந்தேன், ஒரு மனிதர் தொழுது கொண்டிருந்தார், அவர் ருகூவையும் ஸுஜூதையும் முடித்த பின் (கடைசி இருப்பிற்காக அமர்ந்து) அத்தஹிய்யாத்தை ஓதினார், அவருடைய துஆவிலே (பின் வரும் துஆவை) ஓதினார்,

' اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ بأَنَّ لَكَ الْحَمْدَ لاَ إِلَهَ اِلاَّ أَنْتَ الْمَنَّانُ يَا بَدِيْعَ السَّمَاوَاتِ وَالأَرْضِ يَا ذَا الْجَلاَلِ وَالإِكْرَامِ يَا حَيُّ يَا قَيُّومُ إِنِّيْ أَسْأَلُكَ ' (أحمد)

**பொருள்;:** யா அல்லாஹ்! நிச்சயமாக புகழ் அனைத்தும் உனக்கே உரித்தானது, வணக்கத்திற்குரிய இறைவன் மிக கொடையாளனாகிய உன்னைத்தவிர வேறு யாரும் இல்லை. வானங்களையும் பூமிகளையும் முன்மாதிரி இன்றி படைத்தவனே! மகத்துவமும் கண்ணியமும் உடையவனே! நித்திய ஜீவனே! (இத்தனை உனது பெயர் மற்றும் தன்மைகளை) கொண்டு நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன், என பிரார்த்தித்தார், அப்போது நபி(ஸல்) அவர்கள், இவர் அல்லாஹ்வை எதைக் கொண்டு பிரார்த்தித்தார் என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார்கள், அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே மிக அறிந்தவர்கள் என நபித்தோழர்கள் கூறினார்கள், என் உயிர் எவனிடம் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக, நிச்சயமாக அவர் அல்லாஹ்வை மிக கண்ணியமான திருநாமத்தைக் கொண்டு பிரார்த்தித்து விட்டார், அது எப்படிப்பட்ட பெயர் என்றால், அதைக் கொண்டு பிரார்த்திக்கப்பட்டால் அல்லாஹ் விடை கொடுப்பான், இன்னும் அதைக் கொண்டு கேட்கப்பட்டால் (கேட்டதை) கொடுப்பான் எனக் கூறினார்கள். (அஹ்மத்)

# இஸ்லாமும் பாடல்களும் (பாகம் - 3)

- *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

மிகப் பழைய பாடல்கள் தான் இவ்வாறு இருக்கிறதென்றால், சமீப காலத்தில் பாடப்பட்ட பாடல்களிலும் கூட இணைவைக்கும் கருத்துக்கள் காணப்படுவதை உணரலாம்.

உதாரணமாக. **'சஞ்சலம் தீர்க்கும் எங்கள் கஞ்சஷவாயி நாகூரா'** என்றொரு பாடல் பாடப்படுகிறது. சஞ்சலம் என்றால் துன்பம் துயரம் என்று பொருள். சஞ்சலம் தீர்ப்பவன் அல்லாஹ்வை தவிர வேறெவராலும் முடியாது.

கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? (இல்லை) எனினும் (இவையெல்லாம் பற்றி) நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகக் குறைவேயாகும். (அல்குர்ஆன் 27:62)

உயிரோடு உள்ள போது கூறினாலும் மனிதர் என்ற ரீதியில் தம்மால் இயன்ற அளவுக்கு சஞ்சலம் தீர்த்து வைக்க சாத்தியமுண்டு. அவர் இறந்து போன பின் எப்படி சஞ்சலம் தீர்த்து வைப்பார். அவர் இப்போதும் சஞ்சலம் தீர்த்து வைப்பார் என்று எண்ணிப் பாடினால், அல்லது பாடக் கேட்டால் அவருக்கு இறந்த பின்பும் அந்த ஆற்றல் உள்ளது என்ற நம்பிக்கை நமக்கு இருப்பதாகப் பொருள்.

அவ்வாறு என்றும் சஞ்சலம் தீர்ப்பவன் எப்போதும் உயிரோடுள்ள எல்லா ஆற்றலும் பெற்ற அல்லாஹ்வின், அந்தத் தன்மை நாகூராருக்கு இருப்பதாக நம்புவது இறைவனுக்கு இணை வைக்கும் மாபாதகச் செயலன்றி வேறென்ன?

இன்னும் இது போன்ற பல ஷிர்க்கான வார்த்தைகள் உள்ள பாடல்களை, இஸ்லாமிய பாடல்கள் என்கிற பேரில் நாம் கேட்டுக் கொண்டும், பாடிக் கொண்டும் தான் இருக்கின்றோம்.

இவ்வாறு இஸ்லாம் தடுக்கும் சமாதி வழிபாட்டை ஆதரித்து, தமிழகத்தில் உள்ள அனைத்து சமாதிகளையும் பெரிய ஒரு பட்டியலிட்டு, அவைகளை தரிசிக்கச் சொல்லி படிக்கின்றார், இன்னுமொரு ஷேக் அப்துல்லாஹ் என்னும் பாடகர், இஸ்லாம் தடுக்கும் சமாதி வழிபாட்டை ஆர்வமூட்டக்கூடிய பாடல், இஸ்லாமிய கீதமாகுமா? சிந்தியுங்கள், இஸ்லாமிய நெஞ்சங்களே!

இதே போன்று நூறு மஸ்அலா என்றும் விறகு வெட்டியார் கதை சூபித்துவத்தையும் இந்து மதக் கொள்கையாகிய ஹமோ வஸ்து - எல்லாம் அவனே என்ற - மஸ்தான்மார்களின் பாடல்களையும் நாம் இஸ்லாமிய லேபல்களில் கேட்டுக் கொண்டிருக்கின்றோம், ஆகவே இனிமேலாவது இப்படிப்பட்ட விஷயங்களில் நாம் விழிப்பாக இருப்போமாக.!

தமிழில் இப்பாடல்கள் இருப்பதால் அதிலுள்ள தவறுகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. அரபியில் சில பாடல்கள் நம்மவர்களால் மௌவிது என்ற பெயரில் இயற்றப்பட்டு பாடப்படுகின்றன. அவற்றில் இதை விட படுபயங்கரமான நச்சுக்கருத்துக்கள் இருக்கின்றன என்பதை நம் யாருக்கும் தெரியாத ஒன்றல்ல. அதாவது அல்லாஹ்வின் தன்மைகளை நபி(ஸல்) அவர்களுக்கும், வலிமார்களுக்கும் பங்கு வைத்துக் கொடுக்கும் பாடல்களாகும். இவைகள் நமது வீடுகளில் வணக்கம்? என்கிற பெயரில் வலம் வந்து கொண்டிருக்கின்றது. அவைகளில் சில வரிகளை உங்கள் முன் தருகின்றோம்.

நாம் கூறப்போகும் மவ்லிதுப் பாடல்கள் எத்தனை குர்ஆன் வசனங்களுடனும் ஹதீதுகளுடனும் மோதுகின்றது என்பதைப் பாருங்கள்.

**شرف الأنام مولد – المخاطب هو النبي صلى الله عليه وسلم**

ஷரஃபுல் அனாம் மவ்லிது - இதில் அழைக்கப்படுபவர்கள் நபி(ஸல்) அவர்கள்.

**عَبْدُكَ الْمِسْكِيْنُ يَرْجُو فَضْلَكَ الْجَمَّ الْغَفِيْرَ**
**فِيْكَ قَدْ أَحْسَنْتُ ظَنِّيْ بَشِيْرٌ يَا نَذِيْرُ**

(நான்) உங்களின் ஏழ்மையான அடியான் உங்களின் அருளையும் பெரும் பாவ மன்னிப்பையும் நாடி உங்களிடம் வந்திருக்கின்றேன். சுவர்க்கத்தை கொண்டு நன்மாராயம் சொல்பவரே! நரகத்தை விட்டும் எச்சரிக்கை செய்பவரே! உங்களைப்பற்றி நான் நல் எண்ணம் வைத்திருக்கின்றேன்.

**فَأَغِثْنِيْ وَآجِرْنِيْ يَا مُجِيْرُ مِنَ السَّعِيْرِ**
**مـتَّ ِ ا لْ أُ مُـــورْ**

நரகத்திலிருந்து பாதுகாப்பவரே? கஷ்டமான சூழ்நிலைகளில் எனக்கு உதவுவரே? என் உறைவிடமே? எனக்கு உதவிடுங்கள், என்னை நரகத்திலிருந்து பாதுகாத்திடுங்கள்.

**منقوص مولد – المخاطب هو النبي صلى الله عليه وسلم**

மன்கூசு மவ்லிது - இதில் அழைக்கப்படுபவர்கள் நபி(ஸல்) அவர்கள்.

**إِرْتَكَبْتُ عَلَى الْخَطَا غَيْرَ حَصْرٍ وَعَدَدٍ**
**لَكَ أَشْكُوْ فِيْهِ يَا سَيِّدِيْ خَيْرَ النَّبِيِّ**

அளவிடமுடியாத, கணக்கின்றி நான் பெரும் பாவம் செய்திருக்கின்றேன். நபிமார்களில் சிறந்த என் தலைவரே! அதுபற்றி உங்களிடம் நான் முறையிட வந்திருக்கின்றேன்.

இந்தப் பாடல்களுடன் முறன்படக்கூடிய திருமறை குர்ஆன் வசனங்கள்.

1. மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்களேயானால், அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள். 3:135

2. "என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம் - நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் - நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன்; மிக்கக் கருணையுடையவன்" (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக. 39:53

3. (நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால்; "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்; அவர்கள் என்னிடமே (பிரார்த்தித்துக்) கேட்கட்டும்; என்னையே நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள்" என்று கூறுவீராக. 2:186

**விளக்கம்:** நமது நாடுகளில் தர்ஹாவின் பக்கம் படையெடுக்கும் கூட்டங்கள் முந்தைய காலத்தை விட குறைந்திருந்தாலும் இன்னமும் அப்படிப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் தர்ஹாக்களுக்குச் செல்வதின் நோக்கங்களில் ஒன்று தங்களின் பாவமன்னிப்பை அந்த நல்லடியார்கள் மூலம் கேட்டுக் கொள்வதற்காகத்தான். குர்ஆனிலோ அல்லது ஹதீதிலோ இப்படி இடைத்தரகர்களை வைத்து தங்களின் பாவங்களுக்கு பிழை பொறுப்பு கேட்கும்படி கூறப்படவில்லை. மாறாக எப்படிப்பட்ட தவறுகள் செய்திருந்தாலும், அல்லாஹ்விடத்தில் மாத்திரம்தான், எவ்வித தரகர்களின்றி கேட்கும் படி, திருமறைக் குர்ஆனும் ஹதீதும் தெளிவு படுத்துகின்றது. நமக்கு மிகவும் சமீபத்தில் இருக்கக்கூடிய நித்திய ஜீவனை விட்டுவிட்டு, மரணித்த, பல மைல்கள் தூரத்தில், மண்ணறைக்குள் அடங்கப்பட்டிருக்கும் ஒரு நல்லடியாரை அழைத்து, பிழை பொறுப்பு தேடுவது புத்திசாலித் தனமாகுமா? கப்ரில் அடங்கப்பட்டிருப்பவர் நல்லடியாராக இருந்தாலே இந்த நிலையென்றால், அங்கு அடங்கப்பட்டிருப்பவர் யாரென்றே தெரியாமல் பிரார்த்திப்பது எவ்வளவு அறியாமை! ஆனால் மேல் கூறப்பட்ட பாடல்களில் நபி(ஸல்) அவர்களிடத்தில் பாவ மன்னிப்பு கேட்கும்படி ஆர்வமூட்டப்படுகின்றது. இந்தப்பாடல்கள் மேல் கூறப்பட்ட எத்தனை வசனங்களுடன் மோதுகின்றது? சிந்தித்துப் பாருங்கள்.

**القائل محي الدين الشيخ عبد القادر جيلاني رحمه الله حسب زعمهم**

இந்த பைத்தை எழுதியவர்களின் நம்பிக்கையின் அடிப்படையில், இங்கு கூறப்படுபவர், முஹ்யுத்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி(ரஹ்) அவர்கள்.

**وَأَعْلَمُ عِلْمَ اللهِ أُحْصِيْ حُرُوْفَهُ وَأَعْلَمُ مَوْجَ الْبَحْرِ كَمْ هُوَ مَوْجَةً**

அல்லாஹ்வின் அறிவையும் அவனுடைய அறிவின் எழுத்துக்களையும் நான் அறிவேன், கடலில் எழும் அலைகள் எத்தனை அலைகள் என்பதும் எனக்குத் தெரியும்.

இந்தப்பாடலுக்கு முறன்படும் குர்ஆன் வசனங்கள். (இன்னும்) நீர் கூறுவீராக "அல்லாஹ்வைத் தவிர்த்து, வானங்களிலும், பூமியிலும் இருப்பவர் எவரும் மறைவாயிருப்பதை அறிய மாட்டார்; இன்னும்; (மரித்தோர் இறுதியில்) எப்போது எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள்." 27:65

(நபியே!) நீர் கூறும்; "அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன்; மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நம்மைகளை அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன்; (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது - நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை." 7:188

'அல்லாஹ்வுடைய பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கின்றன என்று நான் உங்களிடம் கூறவில்லை; மறைவானவற்றை நான் அறிந்தவனுமல்லன், நிச்சயமாக நான் ஒரு மலக்கு என்றும் நான் கூறவில்லை; எவர்களை உங்களுடைய கண்கள் இழிவாக நோக்குகின்றனவோ, அவர்களுக்கு அல்லாஹ் யாதொரு நன்மையும் அளிக்கமாட்டான் என்றும் நான் கூறவில்லை; அவர்களின் இதயங்களில் உள்ளதை அல்லாஹ்வே நன்கு அறிந்தவன் (இவ்வுண்மைகளுக்கு மாறாக நான் எதுவும் செய்தால்) நிச்சயமாக நானும் அநியாயக்காரர்களில் ஒருவனாகி விடுவேன்' (என்றும் கூறினார்). 11:31

**விளக்கம்:** மறைவான அறிவு அல்லாஹுவிற்கு மாத்திரம்தான் உரியது, நபி(ஸல்) அவர்களுக்குக்கூட அது கிடையாது என்று திருமறை குர்ஆன் கூறும்போது, உலகத்திலுள்ள மற்ற யாருக்காவது அந்த அல்லாஹுவின் பண்பு இருக்க முடியுமா? இது அப்பட்டமான பொய்யும், அல்லாஹுவிற்கு இணைவைக்கும் செயலுமாகும்..

இன்னும் கேளுங்கள் அபத்தங்களை:

**يَا سَيِّدَ السَّادَاتِ جِئْتُك قَاصِدًا أَرْجُوْ حِمَاكَ فَلاَ تُخَيِّبْ مَقْصَدِيْ**

தலைவர்களுக்கெல்லாம் தலைவரே! உங்களின் பாதுகாப்பை எதிர்பார்த்தவனாக உங்களை நாடி நான் வந்திருக்கின்றேன். என் நோக்கத்தை (நிறைவேற்றாமல்) என்னை நஷ்டவாளியாக்கிவிட வேண்டாம்.

**قَدْ حَلَّ بِيْ مَا قَدْ عَلِمْتَ مِنَ الْأَذَى وَالظُّلْمِ وَالضُّعْفِ الشَّدِيْدِ فَاسْعَدْ**

எனக்கு ஏற்பட்டிருக்கும் கடுமையான பலவீனம், அநியாயம், நோவினை (இவைகள் அனைத்தையும்) நிச்சயம் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள், ஆகவே என்னை சந்தோஷப்படுத்துங்கள்.

**وَمَنْ يُنَادِيْ إِسْمِيْ أَلْفًا بخَلْوَتِهِ عَزْمًا بِهِمَّتِهِ صَرْمًا لِعَفْوَتِهِ أَجَبْتُهُ مُسْرِعًا مِنْ أَجْلِ دَعْوَتِهِ**

மன உறுதியுடன் என் பாவமன்னிப்பை நம்பியவராக தனிமையில் இருந்து என் பெயரை யார் ஆயிரம் முறை அழைக்கின்றாரோ, அவரின் அழைப்பால் நான் வேகமாக வந்து அவருக்கு விடையளிப்பேன்.

**فَلْيَدْعُ يَا عَبْدَ الْقَادِرِ مُحْيُ الدِّيْنِ بَعْدَ الصَّلاَةِ اثْنَتَيْ عَشْرَةَ مِنْ**

رَكْعَةِ

பனிரெண்டு ரக்அத் தொழுத பின் அப்துல் காதிர் முஹ்யுத்தீன் என்று அழைக்கட்டும்.

مَعَ الْفَوَائِدِ وَالْإِخْلَاصِ مَعَ خُضْعَةٍ يَا غَوْثَ الْأَعْظَمِ عَبْدَ الْقَادِرِ السُّرْعَةَ

பயபக்தியோடு சூரத்துல் ஃபாத்திஹாவுடன் சூரத்துல் இக்லாஸையும் ஓதி கண்ணியத்திற்குரிய அப்துல் காதிர் என்னும் உதவியாளரே! வேகமாக வாருங்கள்.

يَا سَيِّدِيْ أُحْضُرْنِي يَامُحْيِ الدِّيْنِ

என் தலைவரே! மார்க்கத்தை உயிர்ப்பிப்பவரே! என்னிடம் சமுகம் அளியுங்கள்.

يَا سَيِّدِيْ عَبْدُ الْقَادِرِ يَا جِيْلَانِيْ بِمَدَدِكَ وَغِيَاثِكَ أَدْرِكْنِـــيْ

என் தலைவரே! அப்துல் காதிர் ஜெய்லானியே! உங்களின் உதவியாலும் ஒத்தாசையாலும் என்னை அடைந்து விடுங்கள்.

يا غوث الأعظم عبد القادر السرعة

அப்துல் காதிரு என்னும் பெரும் உதவியாளரே வேகமாக வாருங்கள்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

---

*ஆஷூரா நோன்பு ... முதல் பக்கத் தொடர்ச்சி ...*

(மக்களையும்) ஏவினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள்.

ஆதாரம்: புகாரி.

### ஆஷூரா நோன்பைப் பற்றியுள்ள ஹதீதுகள்

1. ஆஷூரா நோன்பைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது, அதற்கு அவர்கள் சென்ற வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையும் என்று விடையளித்தார்கள்.

அறிவிப்பவர் : அபூகதாதா(ரலி) அவர்கள்.

ஆதாரம் : முஸ்லிம்.

2. நபி(ஸல்) அவர்கள் ஆஷூராத்தினத்தன்று நோன்பு நோற்று (மற்ற மக்களையும்) நோன்பு நோற்குமாறு ஏவினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள்.

ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

3. ரமலான் நோன்பிற்குப் பிறகு சிறந்த நோன்பு அல்லாஹ்வுடைய மாதமாகிய முஹர்ரத்தின் நோன்பாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரலி) அவர்கள்.

ஆதாரம் : முஸ்லிம்.

4, எதிர்வரும் வருடம் (உயிருடன்) இருந்தால் ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள்.

ஆதாரம் : முஸ்லிம்.

### அன்புச் சகோதர சகோதரிகளே!

முஹர்ரம் மாதத்தின் 9-10 ஆம் நாட்களில் நபியவர்கள் எதற்காக நோன்பு நோற்றார்கள் என்பதை அறிவீர்கள். மேலும் நோன்பைத்தவிர வேறு எந்த விஷேச வணக்கங்களையும் நபியவர்கள் செய்யவில்லை. நபியவர்களை பின்பற்றும் நாமும் அதைத்தான் செய்ய வேண்டும். அதை விட வேறு எதையாவது செய்து விட்டு இதுவும் சுன்னத்து அல்லது வணக்கம் என்று சொன்னால் அல்லாஹ்வின் மீதும் அவனின் தூதர் மீதும் இட்டுக்கட்டுவதாகும். இதற்கு பித்அத் என்று சொல்லப்படும்.

எந்த ஒரு வணக்கமும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு 2 நிபந்தனைகள் அவசியமாகும்.

1. அல்லாஹ்வுக்காகவே மட்டும் (இக்லாஸாக) செய்யவேண்டும்.

2. நபி(ஸல்) அவர்கள் கற்றுத் தந்த முறைப் பிரகாரம் செய்யவேண்டும்.

இந்த இரண்டில் ஒன்று இல்லையென்றால் அந்த வணக்கம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கு ஆதாரமாக சூரத்துல் கஹ்ஃபு என்ற அத்தியாயத்தின் கடைசி வசனத்தைப் பார்க்கவும்.

நமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் புதிதாக (மார்க்கமாக) ஆரம்பிக்கின்றாரோ அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா(ரலி) அவர்கள்.

ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

இன்னும் மறுமையில் நபி(ஸல்) அவர்களின் கையிலிருந்து கவ்தர் என்னும் தடாகத்து தண்ணீரும் கொடுக்கப்படாமல் விரட்டப்படுவார்கள்.

அறிவிப்பவர்: ஸஹ்ல் இப்னு ஸஃது(ரலி) அவர்கள்.

ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

மார்க்கத்தில் இல்லாதவைகளை மார்க்கம் என்று சொன்ன, செய்த காரணத்தினால்தான் இந்த தண்டனைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள்.

நமது பகுதிகளில் எத்தனை சடங்குகளை மார்க்கம் என்று சொல்லி இந்த நாளில் செய்கின்றோம். இந்த நாளில் குறிப்பிட்ட உணவுப்பண்டங்களை சமைப்பது, உடம்பில் இரத்தத்தை ஓட்டுவது, மக்களை ஒன்று கூட்டி குறிப்பிட்ட சில வணக்கங்களை செய்வது, இன்னும் இது போன்ற எத்தனையோ செயல்களை இந்த நாளில் நம்மக்கள் செய்கின்றார்கள். இவைகள் அனைத்தும் பித்அத் என்னும், பாவமான செயலாகும். மேலே கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு மாற்றமானதுமாகும். அப்படிப்பட்ட வணக்கங்களை அல்லாஹ் ஏற்றுக்கொள்ளாதிருப்பது மட்டுமல்லாமல் நாளை மறுமையில் தண்டனையும் வழங்குவான். இவைகளை நபி(ஸல்) அவர்கள் செய்யவில்லை என்று தெரிந்த பின்பும் நாம் செய்தால், அல்லாஹ்விடத்தில் பெரும் குற்றவாளிகளாக கருதப்படுவோம். ஆகவே, முஹர்ரம் 9-10 ஆம் நாட்களில் நோன்பை மாத்திரம் விஷேச வணக்கமாக செய்யுங்கள். இதுதான் நபி வழியாகும்.

அல்லாஹ் நம் அனைவரையும் நபி வழி நடந்த நன்மக்களாக வாழ்ந்து மரணிக்கச் செய்வானாக.

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 4)

- டாக்டர் ஷேக் சையது M.D.

فَلْيَنْظُرِ الْإِنْسَانُ مِمَّ خُلِقَ – خُلِقَ مِنْ مَاءٍ دَافِقٍ – يَخْرُجُ مِنْ بَيْنِ الصُّلْبِ وَالتَّرَائِبِ (الطارق: 5,6,7)

ஆகவே மனிதன், (தான்) எதிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை அவன் சிந்தித்து பார்க்க வேண்டாமா?

குதித்து வெளியாகும் (ஒரு துளி) நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான்.

அது (ஆணின்) முதுகந் தண்டிற்கும் கடைசி நெஞ்செலும்புகளுக்கும் மத்தியிலிருந்து வெளிப்படுகிறது. (அல்குர்ஆன் 86: 5,6,7)

கடந்த இதழில் 86 அத்தியாத்தின் 6வது வசனத்தில் "குதித்து வெளியாகும் நீரிலிருந்து மனிதன் படைக்கப்பட்டான்" என்று இறைவன் கூறியதன் பொருளை விளக்கமாக விந்து எவ்வாறு வெளிப்படுகிறது என்றும், அதன் பயன்பாடுகள் என்ன என்றும் பார்த்தோம்.

மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்ற இரகசியத்தை இந்த வசனத்தில் குறிப்பிடும் இறைவன் அதனை சாதாரணமான செய்தியாக சொல்லாமல், அந்த செய்தியை சொல்வதற்கு முன்பே மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்று சிந்தித்துப் பார்க்கட்டும் என்று கூறி, நமது சிந்தனையைத் தூண்டிவிட்டு, அதற்குப்பிறகுதான் "குதித்து வரும் நீரிலிருந்து மனிதன் படைக்கப்பட்டான்" என்ற தகவலைக் கூறுகிறான்.

"குதித்து வரும் நீரிலிருந்து" எவ்வாறு மனிதன் படைக்கப்பட்டிருக்க முடியும், அதன் தன்மைகள் யாது? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பம் போலும். காரணம் அவ்வாறு ஒரு மனிதன் சிந்தித்து தான் எதிலிருந்து படைக்கப் பட்டிருக்கிறோம் என்பதின் உண்மை நிலையை தெரிந்து கொண்டால், தன்னைப்படைத்த இறைவன் ஒருவன் உண்டு என்பதை நம்பி, அந்த இறைவனின் அற்புத ஆற்றலை அறிந்து கொள்வான் அப்போது தன்னைப்படைத்த ஆற்றல் மிக்க அல்லாஹ்வை அஞ்சி நடக்க வேண்டும் என்ற உணர்வு அவனில் ஏற்படும். எனவே "குதித்து வரும் நீர்" எத்தகைய தன்மை வாய்ந்தது என்று இன்னும் சற்று ஆழமாக சிந்தித்துப் பார்ப்போம்.

விந்துவின் சேர்மங்கள்:

إِنَّا خَلَقْنَا الْإِنْسَانَ مِنْ نُطْفَةٍ أَمْشَاجٍ نَبْتَلِيهِ فَجَعَلْنَاهُ سَمِيعاً بَصِيراً (الانسان:2)

நிச்சயமாக நாம் மனிதனை கலப்பான ஓர் இந்திரியத்துளியிலிருந்து நாம் சோதிப்ப(தற்கு நாடிய)வர்களாக அவனைப் படைத்தோம் எனவே செவியுறுபவனாக, பார்ப்பவனாக அவனை நாம் ஆக்கினோம். (அல் குர்ஆன்: 76: 2)

இந்த வசனத்தில் இந்திரியத்திற்கு "கலப்பான" என்ற ஒரு தன்மையை சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு பல விரிவுரையாளர்களும் "பெண்ணின் கரு முட்டையுடன் கலந்த இந்திரியம்" என்று பொருள் கொள்கிறார்கள்.

ஆனால் வேறு சில விரிவுரையாளர்கள் "அந்த இந்திரியத்தில் மரபணுக்கள், உயிரணுக்கள், வேதியியல் பொருட்கள், மேலும் பல தனிமங்கள் சேர்ந்திருப்பதால் அதனை கலப்பான இந்திரியம் என்று இறைவன் கூறியுள்ளான் எனக் கருதுகிறார்கள். இந்த வசனத்தில் இடம் பெற்றுள்ள "கலப்பான" என்ற வார்த்தைக்கு இவ்வாறு இருவகையான பொருள் கொள்வதற்கும் எந்த தடையும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. காரணம் இந்த வசனத்தில் "கலப்பான இந்திரியம்" என்று பொதுவாகத்தான் இறைவன் குறிப்பிட்டுள்ளான், எதனுடன் கலந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை, எனவே இரண்டு விதமாகவும் இந்த வசனத்திற்கு பொருள் கொள்வதற்கு சாத்தியம் உண்டு.





மேலும் மனிதன் படைக்கப்பட்ட செய்திகளைக்கூறும் அனைத்து வசனங்களை ஆழமாக ஆய்வு செய்து பார்த்தால் இரண்டாவது பொருள்தான் மிகப்பொருத்தமாக இருக்கிறது. இந்தக் கருத்தை சையது குத்பு என்ற விரிவுரையாளர் தனது விரிவுரையில் குறிப்பிடுகிறார். இந்த இரண்டாவது பொருள் எவ்வாறு பொருந்தி வருகிறது என்பதைப் பார்ப்போம்.

இறைவன் பயன்படுத்தியுள்ள "நுத்ஃஃபத்" என்ற வார்த்தைக்கு விந்து என்றுதான் இதுவரை பல மொழிபெயர்ப்பாளர்களும், விரிவுரையாளர்களும் அர்த்தம் சொல்லிவந்துள்ளார்கள். "நுத்ஃஃபத்" என்ற வார்த்தைக்கு வேறு ஒரு அர்த்தம் இருப்பதை பலரும் கவனத்தில் கொள்ளவில்லை. அந்த அர்த்தத்தை பார்ப்பதற்கு முன்பு விந்துவின் சேர்மங்கள் என்னென்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

1. Citri Acid (சிட்ரிக் அமிலம்) 2. Cholesterol (கொலஸ்டிரால்) 3. Zinc Phosphates (ஜின்க் பாஸ்ஃபேட்) 4. Acid Phosphates (ஆசிட் பாஸ்ஃபேட்) 5. Bicorbonates (பைகார்பனேட்) 6. Hyalorunic Acid (ஹைலோரினிக் அமிலம்)

இந்த வகைத் திரவம் சுமார் 20% வீதம் வரை இருக்கும்.

1. Androgen (ஆன்ரோஜன்) 2. Estrogen (ஈஸ்ட்ரோஜன்) 3. Glutamic Acid (குளுட்டாமிக் ஆசிட்) 4. Inositol (இனோசிட்டால்) 5. Inhibin

(இன்ஹிபின்) 2. Protein (புரதம்)

இந்த வகைத் திரவங்கள் உயிரணுக்கள் உயிர் வாழ்வதற்கும் பாதுகாப்பாக கற்பறைக்கு செல்வதற்கும் துணை புரிகிறது. இந்த உயிரணுக்கள், திரவங்கள் சேர்ந்த மொத்தத்திற்கு பெயர்தான் விந்து அல்லது இந்திரியம் என்று கூறுகிறோம். இதனை இறைவன் குர்ஆனில் "மாஉ" என்றும், "மனிய்" என்றும் குறிப்பிட்டிருப்பதை பின்வரும் வசனங்களின் மூலம் அறிந்து கொள்கிறோம்.

ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِنْ سُلَالَةٍ مِنْ مَاءٍ مَهِينٍ (السجدة 8:)

அற்ப நீரிலிருந்து வடிகட்டி எடுக்கப்பட்ட மூலத்திலிருந்து மனிதனின் சந்ததிகளை உண்டாக்கினான். (அல் குர்ஆன் 32: 8)

أَلَمْ نَخْلُقْكُمْ مِنْ مَاءٍ مَهِينٍ (المرسلات 20:)

அற்பமான நீரிலிருந்து உங்களை நாம் படைக்க வில்லையா? (அல் குர்ஆன் 77: 20)

خُلِقَ مِنْ مَاءٍ دَافِقٍ (الطارق 6:)

குதித்து வெளிவரும் நீரிலிருந்து மனிதன் படைக்கபட்டான். (அல் குர்ஆன் 86: 6)

أَلَمْ يَكُ نُطْفَةً مِنْ مَنِيٍّ يُمْنَى (القيامة 37:)

(கற்பத்தில்) செலுத்தப்படும் விந்துவில் உள்ள ஒரு நுத்ஃபாவாக அவன் இருக்கவில்லையா? (அல்குர்ஆன் 75:37)

மேற்கூறப்பட்ட முதல் மூன்று வசனத்தில் விந்துவின் மொத்தத்திற்கு "மாஉ" என்ற வார்த்தையையும், நான்காவது வசனத்தில் "மனிய்" என்ற வார்த்தையையும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

ஆனால் "நுத்ஃபத் என்ற வார்த்தைக்கு விந்து என்று பொருள் கொள்வது அவ்வளவு பொருத்தமானதல்ல. அந்த வார்த்தைக்கு விந்துவில் உள்ள "உயிரணு" என்று அர்த்தம் கொள்வது குர்ஆனுடைய வசனங்களுடன் மிகப்பொருத்தமாக உள்ளது. இந்த அர்த்தை அந்த வார்த்தைக்கு கொடுத்து பொருள் விளங்கும் போது அல்லாஹ் எவ்வளவு ஆழமாக இந்த விஞ்ஞான செய்தியை சொல்லியிருக்கிறான் என்பதும் நமக்குத் தெரியவரும்.

அது சம்மந்தமான வசனங்கள் வின்வருமாறு,

ثُمَّ جَعَلْنَاهُ نُطْفَةً فِي قَرَارٍ مَكِينٍ (المؤمنون 13:)

أَلَمْ نَخْلُقْكُمْ مِنْ مَاءٍ مَهِينٍ (المرسلات 20:)

خُلِقَ مِنْ مَاءٍ دَافِقٍ (الطارق 6:)

ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِنْ سُلَالَةٍ مِنْ مَاءٍ مَهِينٍ (السجدة 8:)

خَلَقَ الْإِنْسَانَ مِنْ نُطْفَةٍ فَإِذَا هُوَ خَصِيمٌ مُبِينٌ (النحل 4:)

يَا أَيُّهَا النَّاسُ إِنْ كُنْتُمْ فِي رَيْبٍ مِنَ الْبَعْثِ فَإِنَّا خَلَقْنَاكُمْ مِنْ تُرَابٍ ثُمَّ مِنْ نُطْفَةٍ ثُمَّ مِنْ عَلَقَةٍ ثُمَّ مِنْ مُضْغَةٍ مُخَلَّقَةٍ وَغَيْرِ مُخَلَّقَةٍ لِنُبَيِّنَ لَكُمْ وَنُقِرُّ فِي الْأَرْحَامِ مَا نَشَاءُ إِلَى أَجَلٍ مُسَمًّى ثُمَّ نُخْرِجُكُمْ طِفْلًا ثُمَّ لِتَبْلُغُوا أَشُدَّكُمْ وَمِنْكُمْ مَنْ يُتَوَفَّى وَمِنْكُمْ مَنْ يُرَدُّ إِلَى أَرْذَلِ الْعُمُرِ لِكَيْلَا يَعْلَمَ مِنْ بَعْدِ عِلْمٍ شَيْئًا وَتَرَى الْأَرْضَ هَامِدَةً فَإِذَا أَنْزَلْنَا عَلَيْهَا الْمَاءَ اهْتَزَّتْ وَرَبَتْ وَأَنْبَتَتْ مِنْ كُلِّ زَوْجٍ بَهِيجٍ

(الحج 5:)

مِنْ نُطْفَةٍ إِذَا تُمْنَى (لنجم 46:)

أَلَمْ يَكُ نُطْفَةً مِنْ مَنِيٍّ يُمْنَى (القيامة 37:)

إِنَّا خَلَقْنَا الْإِنْسَانَ مِنْ نُطْفَةٍ أَمْشَاجٍ نَبْتَلِيهِ فَجَعَلْنَاهُ سَمِيعاً بَصِيراً

(الانسان 2:)

مِنْ نُطْفَةٍ خَلَقَهُ فَقَدَّرَهُ (عبس 19:)

ثُمَّ خَلَقْنَا النُّطْفَةَ عَلَقَةً فَخَلَقْنَا الْعَلَقَةَ مُضْغَةً فَخَلَقْنَا الْمُضْغَةَ عِظَاماً فَكَسَوْنَا الْعِظَامَ لَحْماً ثُمَّ أَنْشَأْنَاهُ خَلْقاً آخَرَ فَتَبَارَكَ اللَّهُ أَحْسَنُ الْخَالِقِينَ (المؤمنون 14:)

(இது இந்த ஆய்வாளரின் கருத்து தான். இதில் மாற்றுக் கருத்து இருந்தால் பத்திரிக்கைக்கு அறியத் தரவும்).

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

# இறையச்சம்

அவற்றின் (குர்பானி) மாமிசங்களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒரு போதும் அடைவதில்லை உங்களுடைய தக்வா (பயபக்தி) தான் அவனை அடையும் (22:37)

ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள், மேலும் ஒவ்வொருவரும் (மறுமை) நாளைக்காக தான் முற்படுத்தி வைத்திருப்பதைப் பார்த்துக் கொள்ளட்டும். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்பவற்றை, நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன். (59:18)

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்வீர்களானால் அவன் உங்களுக்கு (நன்மை தீமைகளைப்) பிரித்தறிந்து நடக்க கூடிய நேர்வழி காட்டுவான். இன்னும் உங்களை விட்டும் உங்கள் பாவங்களைப் போக்கி உங்களை மன்னிப்பான். ஏனெனில், அல்லாஹ் மகத்தான அருட்கொடையுடையவன். (8:29)

"நிச்சயமாக இந்த உலகம் பசுமையானது, இன்பமானது, அதில் அல்லாஹ் உங்களை மேய விட்டிருக்கின்றான், நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என அவன் கவனிக்கின்றான். எனவே உலக ஆசாபாசங்களை விட்டும் ஒதுங்கிக் கொள்ளுங்கள். பெண்கள் விஷயத்தில் நீங்கள் கவனமாக இருங்கள். இஸ்ரவேலரின் சமூகத்தில் ஏற்பட்ட முதல் சோதனை பெண்களால் ஏற்பட்டதேயாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அபூஸயீதுல் குத்ரி(ரலி) :முஸ்லிம்)

# அழைப்பு பணியின் அவசியம் (பாகம்-2)

- உம்மு யாஸிர்

## அழைப்பு பணி எப்படி செய்வது

தான் அறிந்த மார்க்கச் செய்தியை, பிறருக்கு எடுத்து கூறுவதே, அழைப்பு பணியாகும். இதற்காக முழுமையாக இஸ்லாத்தை அறிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. நாம் கூறும் விஷயத்தில் நமக்கு தெளிவிருந்தால் அதை பிறருக்கு கூறுவதும் அழைப்பு பணிதான். இதை உணராத பலர், அழைப்ப பணி ஆலிம்களின் கடமை என நினைக்கின்றனர். இது தவறாகும். நாம் நமது நண்பர் நண்பிகளை சந்திக்கும் போதும் அவர்களை எமது வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கும் போதும் உரையாடல் மூலமாக தஃவாவை முன்னெடுத்து செல்லலாம். பேச்சோடு பேச்சாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நல்ல கருத்துக்களை முன் வைக்கலாம். இப்படி அவர்களிடம் காணப்படும் தவறுகளை களைய முற்பட வேண்டும்.

இதற்கு யூசுப் (அலை) அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உதாரணமாக கூறலாம். நபி யூசுப் (அலை) அவர்கள் சிறையில் நீண்ட காலமாக இருந்தார்கள். அவர்களுடன் இன்னும் இருவர் அச்சிறையில் இருந்தனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட கனவின் விளக்கத்தை கூறுவதற்கு முன்னர் பல தெய்வங்களை வழிபடுவது சிறந்ததா? அல்லது அனைத்தையும் அடக்கியாழ்பவன் சிறந்தவனா? என்று கேட்டார்கள். இதன் மூலம் அவர்களது சிந்தனையில் ஏகத்துவத்தின் சிறப்பை பதியச் செய்தார்கள். இதனை தொடர்ந்து அல்லாஹ்வை விட்டுவிட்டு நீங்கள் வணங்குபவைகள் அனைத்தும் போலியானவை, அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். அதுதான் சரியான மார்க்கம் என்ற கருத்தை முன் வைத்தார்கள்.

இங்கே சிறைச்சாலையில் தன்னுடன் இருந்தவர்களிடமே யூசுப் (அலை) அவர்கள் பேச்சோடு பேச்சாக தஃவாவை முன்வைத்திருப்பதை காணலாம். இத்தகைய வாய்ப்புகள் அன்றாடம் அனைவருக்கும் ஏற்படலாம். தருணம் பார்த்திருந்து தக்க நேரத்தில் கருத்துக்களை முன்வைப்பதில் நாம் முனைப்போடு செயல்பட வேண்டும்.

அழைப்புப்பணி ஹிக்மத்தோடு (அறிவோடு) ஆற்ற வேண்டிய பணியாகும். அன்பான, கனிவான பேச்சு, எதிர் கருத்துள்ளவர்களையும் மதிக்கும் மனோபான்மை, இரக்க குணம், ஈகை, கருணை, பொறுமை, பணிவு போன்ற உயரிய பண்புகள் மூலம் நபி(ஸல்) அவர்களின் அழைப்பு பணி பொலிவு பெற்றது.

அழைப்பு பணியில் ஈடுபடுவோர் தமது பிரச்சார இலக்காக எதை கொள்ளலாம் என்பதை உறுதியாக தீர்மானிக்க வேண்டும். அப்படி தீர்மானிக்கும் போது, முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளித்து பேசவேண்டியவைகளுக்கு அதற்குரிய இடம்பார்த்து பேச வேண்டும். ஒரு இடத்தில் இணைவைக்கப்படுகின்றது என்று வைத்து கொள்ளுங்கள், அங்கே தொழுகை பற்றியோ இன்னபிற வணக்கங்கள் பற்றியோ பேசுவது பொருத்தமல்ல,

## விழி இழந்தவனுக்கு விளக்கு பிடிக்கலாமா?

செவி இழந்தவனுக்கு கவி பாடலாமா? என்பது போல்தான். ஷிர்க் செய்பவர்களுக்கு மத்தியில் ஷிர்க்கை பற்றி பேசாமல், தொழுகை பற்றி பேசுவது. எந்த இடத்தில் எதற்கு முதன்மையும் முக்கியத்துவமும் அளிக்க வேண்டும் என்பதை சரியாக தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் நபிமொழி பிரச்சார படிமுறையை எமக்கு தெளிவாக விளக்குகின்றது.

நபி(ஸல்) அவர்கள் முஆத்(ரலி) அவர்களை எமனுக்கு அனுப்பும் போது அவர்களை நோக்கி பின்வருமாறு கூறினார்கள்.

முஆதே! நீர் வேதம் அருளப்பட்ட ஒரு சமூகத்தின் பக்கம் செல்கின்றீர், முதலில் அல்லாஹுவையன்றி வேறு இறைவன் இல்லையென்றும், முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹுவின் தூதர் என்பதின் பக்கம் அவர்களை அழைக்க வேண்டும். அதை அவர்கள் எற்றுக் கொண்டால் அவர்களுக்கு அல்லாஹ் ஒரு தினத்தில் ஐவேளைத் தொழுகையைக் கடமையாக்கியுள்ளான் என்று கூறுவீராக, அதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்கள் மீது ஜக்காத் விதித்திருப்பதையும், அது அவர்களின் செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு அவர்களிலுள்ள ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர்களுக்கு கூறுவீராக. (புகாரி, முஸ்லிம்)

> முஆதே! நீர் வேதம் அருளப்பட்ட ஒரு சமூகத்தின் பக்கம் செல்கிறீர், நீர் அவர்களுக்கு விடுக்கும் முதல் அழைப்பாக ஏகத்தவம் இருக்கட்டும். அதை அவர்கள் ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு அல்லாஹ் ஒரு தினத்தில் ஐவேளைத் தொழுகையைக் கடமையாக்கியுள்ளான் என்று கற்றுக் கொடுப்பீராக, அதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்கள் மீது ஜக்காத் விதித்திருப்பதையும், அது அவர்களின் செல்வந்தர்களிடமிருந்து பெறப்பட்டு அவர்களிலுள்ள ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்றும் கற்றுக் கொடுப்பீராக. (புகாரி, முஸ்லிம்)

முதலில் ஏகத்துவத்தையும் அதன் பின் தொழுகையையும் அதன் பின் ஜகாத்தையும் வேதங்கொடுக்கப்பட்ட அந்த கிறிஸ்தவர்களுக்கு எடுத்துக் கூறுமாறு நபி(ஸல்) அவர்கள் கூறியதலிருந்து, அதிமுக்கியமாக ஏவ வேண்டியதை முதலில் ஏவ வேண்டும் என்பது தெளிவாகின்றது.

## அழைப்பாளருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகள்.

1. தெரிந்ததை மாத்திரம் சொல்ல வேண்டும். நமக்குத் தெரியாத செய்திகளை சொல்லக்கூடாது. நாம் சொல்லும் செய்தி தெளிவான ஆதாரத்தின் அடிப்படையில் சொல்லப்பட வேண்டும்.

(நபியே!) நீர் கூறுவீராக, இதுவே எனது (நேரான) வழியாகும். நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன். தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னைப் பின்பற்றிவோரும் இருக்கிறோம். அல்லாஹ் மிகப்பரிசுத்தமானவன். நான் (அவனுக்கு)இணைவைப்-போரில் உள்ளவனுமல்ல (12:108)

சுஃப்யானுத் தவ்ரி(ரஹ்) அவர்கள் கூறினார்கள், நன்மையைக் கொண்டு ஏவி தீமையைத் தடுப்பவர்களுக்கு மூன்று பண்புகள் அவசியமாகும்.

a) ஏவுவதை தெரிந்திருக்க வேண்டும்.

b) தடுப்பவைகளை தவறு என்று தெரிந்திருக்க வேண்டும்

c) ஏவும் போதும் தடுக்கும்போதும் நீதமாகவும் மிருதுவாகவும் சொல்ல வேண்டும்.

2. தவறைக்காணும் போது மூன்று முறைகளில் ஒன்றை கையாள வேண்டும்.

a) கையால் தடுப்பது. இது குறிப்பிட்டவர்களுக்கே பொருந்தும். தந்தை தன் பிள்ளையை கட்டுப்படுத்துவது, அரசர் தன் பிரஜைகளை, கணவன் மனைவியை இவ்வாறு இது நீண்டு கொண்டே போதும்....)

b) நாவால் தடுப்பது

c) மனதால் வெறுப்பது

உங்களில் யார் தவறைக் காணுகின்றார்களோ அதை கையால் தடுக்கட்டும், அதற்கு முடியவில்லையென்றால் நாவால் தடுக்கட்டும், அதற்கும் முடியவில்லையென்றால் மனதால் வெறுக்கட்டும் அதுதான் ஈமானின் குறைந்த அளவு என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்)

3. அழைப்பாளர் நல்லொழுக்கமுள்ளவராக இருக்க வேண்டும். உண்மை உரைத்தல், நம்பிக்கை, மற்றவர்களுக்கு உபகாரம் செய்தல், இறையச்சம், பொறுமை, அன்பாகப் பழகுதல், மென்மை, வாக்குறுதியை நிறைவேற்றல் போன்ற நற்குணமுள்ளவராக இருக்க வேண்டும்.

(நபியே!) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (இரக்கமுள்ளவராக) நடந்து கொள்கிறீர். மேலும் சொல்லில் கடுகடுப்பானவராக இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள். ஆகவே அவர்(களின் பிழை)களை நீர் மன்னித்து (அல்லாஹ்விடம்) அவர்களுக்காக மன்னிப்புக் கோருவீராக (3:159)

(நபியே!) நிச்சயமாக மகத்தான நற்குணத்தின் மீதும் நீர் இருக்கின்றீர்; (68:4)

4. கெட்ட பழக்கங்களிலிருந்து முற்றாக தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

5. அழைப்புப் பணியின் போது மற்றவர்களோடு ஹிக்மத்தாக (சாதுரியமாக) நடந்து கொள்ள வேண்டும்.

நாம் அழைப்பவர்களின் நிலைகளைத் தெரிந்து அதற்கேற்ப அவர்களை அழைக்க வேண்டும். அவர்களின் அறிவின் தரத்தைத் தெரிந்து அவர்களுடன் பேசவேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்

(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ அதைக் கொண்டு அவர்களிடம் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன் அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்க அறிந்தவன், இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் மிக்க அறிந்தவன். (16:125)

மனிதர்களின் அறிவுக்கு ஏற்றவாறு பேசுங்கள் அல்லாஹ்வும் அவனின் தூதரும் பொய்ப்படுத்தப்படுவதை நீங்கள் விரும்புகின்றீர்களா? என அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள். (புகாரி)

6. மக்கள் சடைவடையும் அளவுக்கு பேசக்கூடாது.

நாங்கள் சடைவடைந்து விடுவோமோ என்பதைப் பயந்து சில நாட்கள் விட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு உபதேசம் செய்வார்கள். (நஸாயி)

அபூவாயில் என்னும் நபித்தோழர் கூறுகின்றார்கள். அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் எங்களுக்கு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். நாங்கள் கூறினோம், அல்லது அவர்களுக்கு கூறப்பட்டது. அபூஅப்துர்ரஹ்மான் அவர்களே! உங்களின் சொற்பொழிவைக் கேட்க எங்களுக்கு மிகவும் விருப்பமாக இருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு நாளும் எங்களுக்கு நீங்கள் சொற்பொழிவு செய்ய நாங்கள் விரும்புகின்றோம் எனக் கூறினோம். அப்போது அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள், நீங்கள் சடைவடைந்து விடுவீர்கள் என்றுதான் நான் அவ்வாறு செய்யவில்லை, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு விட்டு விட்டு உபதேசம் செய்தது போல் நானும் உங்களுக்கு விட்டு விட்டு உபதேசம் செய்கின்றேன் எனக் கூறினார்கள். (அஹ்மத்)

7. சொல்வதை செய்ய வேண்டும்.

எவர் அல்லாஹ்வின் பக்கம் (மக்களை) அழைத்து, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் உள்ளேன் என்று கூறுகின்றாரோ, அவரைவிட சொல்லால் அழகானவர் யார்? (41:33)

நீங்கள் செய்யாததை(ப்பிறருக்கு)க் கூறுவது அல்லாஹ்விடத்தில் வெறுப்பால் மிகப்பெரியதாகி விட்டது. 61:3

தான் சொல்வதை முதலில் செய்வது இது ஒரு அழைப்பாளரின் பண்பு என்பதை இவ்விரண்டு வசனங்களும் வலியுறுத்துகின்றது.

8. தஃவாப் பணியை மேற்கொள்ளும்போது வரும் சிரமங்களை பொறுமையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். விசுவாசம் கொண்டு, நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களை சகித்து) பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கின்றார்களே அத்தகை யோரைத்தவிர. 103:1,3

### அழைக்கப்பட வேண்டியவர்கள்

மனிதர்கள் அனைவரும் சமமே! வெள்ளையர்கள், கறுப்பர்கள், பணக்காரர்கள், எளியவர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற வித்தியாசமின்றி அனைவருக்கும் மார்க்கத்தை எடுத்துரைக்க வேண்டும். அல்லாஹ்

கூறுகின்றான்.

(நபியே!) நீர் கூறுவீராக! மனிதர்களே! நிச்சயமாகவே நான் உங்கள் யாவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன் (7:158)

இதனால்தான் நபியவர்களைப் பின்பற்றுபவர்களில் மக்காவைச் சேர்ந்த அரபு மொழி பேசும் அபூபக்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், அபீஸீனியாவைச் சேர்ந்த பிலால் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், பாரசீகத்தைச் சேர்ந்த ஸல்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், ரோமாபுரியைச் சேர்ந்த சுஹைப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் இருந்தார்கள், இன்னும் நபியவர்களை பின்பற்றுபவர்களில் மிகப்பணக்காரர் உஸ்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் பரம ஏழை அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் இருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அரபி மொழி பேசுபவர்கள் அரபி அல்லாத மொழி பேசுபவர்கள், வெள்ளையர்கள் கறுப்பர்கள் ஆண்கள் பெண்கள் எல்லோரையும் எவ்வித வித்தியாசமின்றி அழைத்தார்கள். அழைப்பாளர்களிலேயே மிகச்சிறந்த அழைப்பாளர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். குறைஷிகள் அமரும் இடம் இன்னும் அவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பார்கள். அதேபோல் ஹஜ்ஜுடைய தினங்கள் வரும்போது வெளியில் இருந்து வரும் மக்களைச் சந்தித்து அவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துரைப்பார்கள். இதன் நோக்கமாகவே தாயிப் நகருத்துக்கு சென்றார்கள். மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள், "இஸ்லாத்திற்காக" போர் புரிந்தார்கள். இப்படி இஸ்லாத்திற்காக பெரும்பாடு பட்டார்கள்.

மூஸா, ஹாரூன் அலைஹிமுஸ்ஸலாம் இருவரையும் ஃபிர்அவ்னிடம் சென்று பிரச்சாரம் செய்யும்படி அல்லாஹ் அவ்விருவருக்கும் ஏவுகின்றான்.

நீங்கள் இருவரும் ஃபிர்அவ்னிடம் செல்லுங்கள். நிச்சயமாக அவன் மிக்க வரம்பு கடந்து விட்டான். ஆகவே நீங்கள் இருவரும் கணிவான சொல்லை அவனுக்குச் சொல்லுங்கள். அதனால் அவன் நல்லுபதேசம் பெறலாம். அல்லது அச்சமடையலாம் 20:43,44

ஆகவே அழைப்பாளர்களாகிய நாமும் மக்களை தேடிச்சென்று சென்று அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்க வேண்டும்.

### ஒவ்வொருவரின் தகுதிக்கேற்ப பேச வேண்டும்.

அழைக்கப்படுபவர் ஒரு நோயாளியைப் போன்றவர், நோயாளி தன் நோயைத் தெரிந்து அதைக் குணப்படுத்துவதற்காக மருத்துவரிடம் செல்வார். மருத்துவர் முதலில் நோயாளியின் நோயைக் கண்டுபிடிக்க வேண்டும். அதன்பிறகுதான் அவருக்குத் தேவையான மருந்தைக் கொடுக்க வேண்டும். மருத்துவர் எல்லா நோயாளிக்கும் ஒரே மருந்தைக் கொடுக்கமாட்டார். ஒவ்வொரு நோயாளிக்கும் தேவைப்படக்கூடிய மருந்தைத்தான் கொடுப்பார். இவ்வாறே நாம் யாரை அழைக்கின்றோமோ அவர்களின் சுற்றுச் சூழல்கள் அறிவாற்றல் அவர்கள் மார்க்கத்தில் எவ்வளவு தொடர்புள்ளவர்கள் முஸ்லிம்களா, முஸ்லிம் அல்லாதவர்களா என்கிற செய்திகளைப் பொதுவாக தெரிந்திருக்க வேண்டும். அதற்கேற்ப அவர்களுடன் பேச வேண்டும். அதே போல் அவர்களுக்கு பொருத்தமான நேரம் அளவு இவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### தஃவாவை மேற்கொள்வதற்கு பயன் படுத்துபவைகள்

### பல முறைகளில் தஃவாப்பணியை மேற்கொள்ளலாம்.

1. பள்ளிகளில், மத்ரஸாக்களில், விடுமுறை தினங்களில் பொதுவான இடங்களில் வகுப்புகளை நடத்துதல், சொற்பொழிவு நிகழ்த்துதல் இன்னும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்தி தஃவாச் செய்வது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் போது மக்கள் பயன் பெறும் வகையில் திறம்பட செய்ய வேண்டும்.

2. தனிப்பட்ட முறையில் மக்களைச் சந்திப்பது. அழைப்பாளர் தனது நேரத்தை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்கே ஒதுக்குவார், இதுவே ஒரு இறையழைப்பாளரின் முக்கிய குறிக்கோளாகும். பாதையில் செல்லும் போது, பள்ளியில், மத்ரஸாக்களில், பொது இடங்களில் வாகனத்தில், ரயிலில், விமானத்தில், தங்குமிடத்தில், நகரத்தில், கிராமத்தில், பெரியவர், சிறியவர், ஆண், பெண் இப்படி கிடைக்கும் வாய்ப்புகளை எல்லாம் பயன் படுத்த வேண்டும்.

3. பிரச்சாரத்திற்கு நாவன்மை மற்றும் எழுத்தாற்றலுடன் மற்றவர்களின் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற வேண்டும். அதன் மூலம் மக்களிடம் மிக இலகுவான முறையிலும் மிக சீக்கிரத்திலும் இஸ்லாத்தைக் கொண்டு சேர்க்கலாம். இன்னும் தன்னுடைய நேரத்தையும் பணத்தையும் இதற்காக செலவிட வேண்டும். ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவருக்கு முடியுமான திறமைகளைப் பெற்று பிரச்சாரப் பணியை அதிகப்படுத்த வேண்டும். உதாரணமாக வசதிபடைத்தவர்களிடமிருந்து பணத்தைச் சேகரித்து பள்ளிவாசல் மற்றும் இஸ்லாமிய மர்கஸ்கள் கட்டுவது, புத்தகங்கள், பிரசுரங்கள் வெளியிடுவது, பிரச்சாரத்துக்கு ஏற்பாடு செய்வது இன்னும் இது போன்றவைகள்......

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பணக்காரர்களின் பணத்தைக் கொண்டும், வீரமுள்ளவர்களின் வீரத்தைக் கொண்டும், நாவன்மை உள்ளவர்களின் பேச்சைக் கொண்டும், எழுத்தாளர்களின் எழுத்தைக் கொண்டும் தோழர்களின் நல்ல ஆலோசனைகளை ஏற்றும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள். ஆகவே நாமும் இப்படிப்பட்டவர் களிடமிருந்து பயன் பெற வேண்டும்.

4. செய்தி ஊடகங்கள் மூலமாகவும் தஃவாச் செய்ய வேண்டும்.

T.V., வானொலி, வீடியோ கேஸட், ஆடியோ கேஸட், பத்திரிக்கை, புத்தகம், பிரசுரம் போன்றவைகளைக் கொண்டு மக்களுக்கு பிரச்சாரம் செய்வது, இவைகளால் நாம் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் தஃவாப் பிரச்சாரத்தை சேர வைத்துவிடலாம். ஆண்கள், பெண்கள், பணக்காரர்கள், எளியவர்கள், சமீபத்தில் வசிப்பவர்கள் தூரத்தில் வாழ்பவர்கள் என்று உலகெங்கும் செய்தியை சேர வைத்துவிடலாம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த மேலான பணியை உரிய முறையில் மேற்கொள்ள இறுதிமூச்சு வரை வாய்ப்பளிப்பானாக!

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 5:4

## போட்டிக்குரிய கேள்விகள்

**1. கியாமத் நாளில் கேட்கப்படும் முதல் கேள்வி இதுவாகத்தான் இருக்கும்**

a. தொழுகையை பற்றி
b. நோன்பை பற்றி
c. ஜகாத் மற்றும் தான தருமங்களை பற்றி

**2. கப்ரில் கேட்கப்படும் மூன்று கேள்விகளில் ஒன்று**

a. உன்னுடைய இமாம் யார்?
b. உன்னுடைய மார்க்கம் எது?
c. உன்னுடைய வாரிசுகள் யார்?

**3. மறுமையில் முகங்குப்புற நரகத்தில் வீசப்படும் மூவரில் ஒருவர்**

a. இஹ்லாஸான முறையில் போராடி ஷஹீதானவர்
b. பெருமைக்காக தான தருமங்களை செலவு செய்தவர்
c. அல்லாஹ்விற்காக கல்வியை கற்று கொடுத்தவர்

**4. முஹர்ரம் 9 மற்றும் 10ஆம் நாளாகிய ஆஷுரா தினத்தில் நோன்பு நோற்பது எதற்காக**

a. பிர்அவ்னை கடலில் மூழ்கடித்து மூஸா(அலை) அவர்களை பாதுகாத்ததற்காக
b. ஹுசைன்(ரலி) அவர்களை கொன்றதற்காக
c. பிர்அவ்ன் மற்றும் ஹுசைன்(ரலி) அவர்கள் இருவரையும் கொன்றதற்காக

**5. கியாமத் நாளில் அர்ஷின் நிழலில் இடம்பெறும் கூட்டங்கள் எத்தனை**

a. 10 வகையான கூட்டங்கள்
b. 3 வகையான கூட்டங்கள்
c. 7 வகையான கூட்டங்கள்

**அறிவுப் போட்டி - 5:3 க்கான பரிசு பெறுபவர் : அப்துல் அஜீஸ் அப்துல் மாலிக் (050 186 8031)**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக Abdullah,AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 5:3 க்கான விடைகள்

1. b. ஒன்றும் செய்ய தேவையில்லை
2. b. ஹஜ்
3. c. 1. ஆரோக்கியம் 2. ஓய்வு நேரம்
4. a. சொர்க்கத்தை தவிர வேறில்லை
5. a. பெண்கள்

# மது அருந்துதல்

என் சமுதாயத்தில் சிலர் மதுவுக்கு வேறு பெயர் சூட்டிக் கொண்டு அதை அருந்துவார்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அபூமாலிக் அல் அஷ்அரீ(ரலி), இப்னுமாஜா, நஸயீ

நிச்சயமாக அல்லாஹ் மதுவைப் பிழிபவன், பிழியச் சொல்பவன், அருந்துபவன், ஊற்றிக் கொடுப்பவன், சுமப்பவன், சுமக்கச் சொல்பவன், விற்பவன், வாங்குபவன், அன்பளிப்புச் செய்பவன், அதன் வருமானத்தில் உண்பவன் என, மதுவுடன் தொடர்புடைய பத்து நபர்களை நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள்.

அனஸ்(ரலி), திர்மிதீ, இப்னுமாஜா, அபூதாவூத்

அதிகம் அருந்தினால் போதை தரும் பானத்தைக் குறைவாக அருந்துவதும் ஹராம் தடுக்கப்பட்டதாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஜாபிர்(ரலி) : திர்மிதீ, அபூதாவூத்

போதை தரும் அனைத்தும் மதுவாகும், போதை தரும் அனைத்தும் ஹராமாகும். யார் இவ்வுலகில் போதைப் பொருளைத் தொடர்ந்து அருந்திய நிலையில் மரணிக்கிறாரோ மறுமையில் அதை அருந்த மாட்டார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்னுஉமர்(ரலி), புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸயீ,

புளிக்க வைக்கப்பட்ட தேன் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது அதற்கவர்கள் போதை தரும் அனைத்தும் ஹராம் என்றார்கள்.

ஆயிஷா(ரலி), திர்மிதி

போதை தரும் அனைத்தும் ஹராமாகும். எது ஃபர்க் அளவுக்கு (சுமார் 30 கிலோ) சாப்பிட்டால் போதை தருமோ அதில் கையளவும் ஹராம் தான் என்று நபி(ஸல்) கூறியதாக ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள்.

அஹ்மத், அபூதாவூத், திர்மிதி